SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: அச்சோப் பதிகம்**

**தில்லையில் அருளியது**

* * * * *

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவம்ஆக்கி எனைஆண்ட
அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

நெறிஅல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறிஒன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தைஎனக்கு
அறியும்வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

பொய்எல்லாம் மெய்என்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையல் இடம் கொண்டபிரான் தன்கழலே சேரும் வண்ணம்
ஐயன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group

மண்அதனில் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணம்இலா அன்பருளி எனையாண்டிட்டு என்னையும்தன்
சுண்ண வெண்ணீறு அணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்று
அஞ்சேல் என்று அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

வெந்துவிழும் உடல்பிறவி மெய்என்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தம்அறுத்து எனைஆண்டு பரிசுஅறஎன் துரிசும்அறுத்து
அந்தம்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசம்எனும் தாழ்உருவி
உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்து உட்பொருளை
ஐயன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

சாதல் பிறப்புஎன்னும் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக்கு அணிஇழையார் கலவியிலே விழுவேனை
மாதுஒருகூறு உடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதிஎனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதல்ஆய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***